பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 08 | புதன்கிழமை | 21.02.2024 | அதிர்வு 204

## 13 இற்கு முடிவு கட்டாமல் ஜனாதிபதி முறைமையில் கைவைக்கவே கூடாதாம்!

### சு.க. கூறுகின்றது

“அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்காமல் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை 06



# அரசமைப்புக்கு முரணாக அமைந்துள்ளது உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்

## உயர்நீதிமன்றத்தின் அதிரடித் தீர்ப்பு நாடாளுமன்றத்தில் நேற்று வாசிப்பு

“உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் பெரும்பாலான ஏற்பாடுகள் அரசமைப்புக்கு முரணானது. ஒருசில ஏற்பாடுகளை நிறைவேற்ற வேண்டுமாயின் அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு பெற்றுக்கொள்வதுடன், மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும்.”

- இவ்வாறு நாடாளுமன்றத்துக்கு அறிவித்துள்ளது உயர்நீதிமன்றம். 06

# இலங்கை அமெரிக்காவின் பிராந்தியம் அல்ல!

## அமெரிக்கத் தூதுவரின் கருத்துக்கு அரசு இப்படி பதில்



“இலங்கைஅமெரிக்காவின்பிராந்தியமல்ல. இறையாண்மையுடைய சுயாதீனமான எமது நாட்டின் நாடாளுமன்றத்துக்கு மாத்திரமே, சட்ட திட்டங்கள் தொடர்பான உரிமை காணப்படுகின்றது.”

– இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருக்கு அரசு பதிலளித்துள்ளது.

நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தொடர்பில் கவலை வெளியிடுகின்றார் என்று அமெரிக்கத் தூதுவர் 06



# சுமந்திரனின் அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்பது பற்றிய விசாரணை முடிவு

## தீர்ப்பை நேற்று ஒத்திவைத்தது உயர்நீதிமன்றம்



உயர்நீதிமன்றம் வழங்கிய பரிந்துரையை உதாசீனப்படுத்தி, அதற்கு மாறாக, நிகழ்நிலை காப்புச் சட்டம் நிறைவேறியிருப்பதாகச் சபாநாயகர் சான்றளித்திருக்கின்றார், அது தவறானது எனக் குறிப்பிட்டு ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்பதா 07




இப்போதெல்லாம் ஒரு பழமொழியை அடிக்கடி என் பத்திகளில் எழுத வேண்டி இருக்கின்றது. அது – ‘ஊருக்கடி உபதேசம், உனக்கில்லையடி!’– என்பதுதான்.

எல்லோரும் ஊருக்கு உபதேசம் செய்கின்றார்கள். தாங்கள் அவற்றைக் கடைப்பிடிக்கின்றார்கள் இல்லை.

இது தொடர்பில் ஒரு விடயம் நேற்று நாடாளுமன்றத்தில் அம்பலமாகி அதிர்ச்சி அளித்திருக்கின்றது. 06

# யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தில் இன்று நடைபெறும் தொழில் வாய்ப்புச் சந்தை

## 43 தொழில் வழங்குநர்களிடம் 800 க்கும் மேற்பட்டவர்கள் தொழில் பெற வாய்ப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் தொழிற் சந்தை நிகழ்வு இன்று 21 ஆம் திகதி, புதன்கிழமை காலை 9:00 மணி முதல் கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட வளாகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக தொழிற்றுறைத் தொடர்பு மையம் மற்றும் தொழில் வழிகாட்டல் அலகு ஆகியவை இணைந்து நடத்தும் இந்தத் தொழில் வாய்ப்பு சந்தை – 2024 இற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில்–

இத்தெழில்வாய்ப்புச் சந்தையின் பிரதான நோக்கமாக அமைவது நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கான பயிற்சி வாய்ப்பைப் (Internship Opportunities) பெற்றுக் கொடுப்பதாகும். இந்தத் தொழில் வாய்ப்புச் சந்தையில் கணக்கியல், நிதியியல், மனிதவள, சந்தைப்படுத்தல், வணிகத் தொழிநுட்பம் , தொடர்பாடல் மற்றும் ஆடை உற்பத்திகளில் ஈடுபடும் சுமார் 43 தொழில் வழங்குநர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். சுமார் 800 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு தமது தொழில் வாய்ப்புகள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தவிர, தொழில் தேடும் இளைஞர், யுவதிகள், உயர் தொழில் நுட்பவியல் நிறுவன மாணவர்கள் உட்பட ஆர்வமுடைய சகலரும் இதில் பங்குபற்றிப் பயனடைய முடியும் என்றும், சமீபத்தில் தமது பீடத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தொழிற்றுறை நிறுவனங்களுடன் மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் தொடர்புகளை விருத்தி செய்தல் என்பன இத் தொழில் வாய்ப்புச் சந்தையின் துணை நோக்கங்களாகக் காணப்படுகின்றன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பணவீக்கத்தை 5 வீதமாக கொண்டுவர நடவழக்கை

இந்த ஆண்டின் நடுப்பகுதியில் பணவீக்கத்தை 5 சதவீதமாக கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

70 சதவீதம் வரை அதிகரித்திருந்த பணவீக்க வீதம் 6 சதவீதமாக குறைந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் நேற்று நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.


அத்துடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 128 வீதமாக அதிகரித்துள்ள பொதுக்கடன் தொகை 104 வீதமாக குறைந்துள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.



# இளம் கர்ப்பிணித் தாய் பாம்பு கடித்து மரணம்!

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பாம்புக்கடிக்கு இலக்காகி மூன்று மாத கர்ப்பிணித் தாயொருவர் உயிரிழந்துள்ள சம்பவமொன்று நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.



திருகோணமலை மொரவெவ ஆறாம் வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த இமேஷா குமாரி (வயது 23) என்ற மூன்று மாத கர்ப்பிணித் தாயொருவர் நேற்று மாலை மாடு கட்டுவதற்காகச் சென்றபோது பாம்புக்கடிக்கு இலக்காகியுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

மூன்று வயது குழந்தையின் தாயான இந்தப் பெண் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்திருந்தார் எனவும், சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய சீனப் பெண்மணி கொழும்பில் கைது

பேருவளை பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர்களை தாக்கிய குற்றச்சாட்டில் சீனப் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேருவளையில் வசித்துவந்த 36 வயதுடைய சீனப் பெண்ணொருவரே கைதாகியுள்ளார்.

பேருவளை பகுதியிலுள்ள வீடொன்றில் செல்லுபடியாகும் விசா இன்றி, சீனப் பெண் ஒருவர் தங்கியிருகின்றார் எனக் கிடைத்த முறைப்பாட்டை விசாரிக்கச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகி, சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கைதான சந்தேகநபரை களுத்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் என பேருவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# இலங்கை மத்திய வங்கி அதிகாரிகளின் சம்பள அதிகரிப்பு சட்டவிரோதமானது

## லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. சபையில் குற்றச்சாட்டு



"நாட்டை வங்குரோத்து அடையச் செய்த மத்திய வங்கி அதிகாரிகளின் மாதச் சம்பளம் நூற்றுக்கு 70 வீதத்தால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. நாடாளுமன்றத்துக்கு அறிவிக்காமல் இவ்வாறு மேற்கொண்டிருப்பது சட்டவிரோத செயலாகும்."

– இவ்வாறு எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்லும்போது இது தொடர்பாக மத்திய வங்கி ஆளுநரரலோ நிதி அமைச்சின் செயலாளராலோ அதிபற்றி நாட்டுக்கோ நாடாளுமன்றத்துக்கோ முற்கூட்டித் தகவல் வெளிப்படுத்தவில்லை.

ஆனால், நாடு வங்குரோத்து அடைவதை வெளிப்படுத்தாமல் மறைத்த மத்திய வங்கி அதிகாரிகளுக்கு நூற்றுக்கு 70 வீத சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டு இருக்கிறது. எவ்வாறு இப்படி சம்பளத்தை அதிகரிக்க முடியும்?

மக்களின் இடுப்புப்பட்டியை இறுக்கிக்கொள்ளுமாறும் காரியாலயங்களில் ஆளணியை குறைக்குமாறும் முழு நாட்டுக்கும் ஆலோசனை வழங்கியவர்கள் இவர்கள்தான்.

ஆனால் மத்திய வங்கியின் பிரதி ஆளுநரின் சம்பளம் 7 லட்சத்து 12 ஆயிரம் ரூபா வரை அதிகரித்திருக்கிறது. இது முறையா எனக் கேட்கிறேன்.

அதேபோன்று அலுவலக உதவியாளர்களின் சம்பளத்தை 75 ஆயிரம் ரூபாவால் அதிககரித்துக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு பலரது பெயர் பட்டியல் இருக்கிறது. இவ்வாறு சம்பளம் அதிகரித்துக்கொள்ள அவர்களுக்கு அதிகாரம் இல்லை. அவர்கள் கண்களை மறைத்து செயற்பட்டுள்ளனர்.

அத்துடன், மத்திய வங்கி அதிகாரிகளின் சம்பள அதிகரிப்பை கணக்கிட்டுக்கொள்ள அவர்களுக்கு அதற்கான அதிகாரம் இருக்கிறது. ஆனால், அதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெறவேண்டும். என்றாலும் தறபோது அதிகரிக்கப்பட்டிருக்கும் சம்பள அதிகரிப்புக்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்படவில்லை.

அதனால், இந்த சம்பள அதிகரிப்பு சட்டவிரோதமாகும். இதனைத் தடுக்காவிட்டால், எதிர்காலத்தில் நாங்கள் அந்தப் பணத்தை அவர்களிடமிருந்து மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன், நாடு வங்குறோத்து அடைவதை மறைத்த இவர்கள் இந்த பொறுப்பில் இருந்து தப்ப முடியாது. அவ்வாறு இருக்கும்போது எவ்வாறு இவர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்க முடியும்? அவர்களின் சம்பளம் குறைக்கப்பட்டிருக்க வேண்டும். இன்று அரச சுகாதார துறையினர் கோரும் 35ஆயிரம் சம்பளத்தை அதிகரிக்க முடியாது என அரசாங்கம் தெரிவிக்கிறது.

மேலும் மத்திய வங்கி அதிகாரிகள் தங்களுக்குத் தேவையான முறையில் சம்பளத்தை அதிகரித்துக் கொண்டிருப்பதுபோல், அவர்களுக்குத் தேவையான முறையில் அவர்களின் ஓய்வூதியத்தையும் அமைத்துக்கொள்ள முடியும்.

அப்படியானால், நாடு வங்குறோத்து அடைந்தமைக்கு பொறுப்பு கூறவேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கும் நபர்களில் மத்திய வஙகியின் முன்னாள் ஆளுநர்களான டபிள்யூ.டி.லக்ஷ்மன், நிவார்ட் கப்ரால் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் ஆட்டிகல ஆகியோருக்கும் இந்த நன்மை வழங்கப்போகிறீர்களா எனக் கேட்கிறோம்."– என்றார்

# யாழில் இந்தியத் துணைத் தூதுவராக சாய்முரளி அடுத்த வாரம் பதவியேற்பு



(ந.லோகதயாளன்)

யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதராகத்தின் புதிய துணைத் தூதராக சாய்முரளி (வயது 33) அடுத்த வாரத்தில் பதவியேற்கவுள்ளார்.

யாழில் உள்ள இந்திய தூதரகத்தின் துணைத் தூதுவர் ராஜேஷ் நட்ராஜின் பதவிக் காலம் எதிர்வரும் 25 ஆம் திகதியுடன் நிறைவுறும் நிலையில் அவர் டில்லிக்கு மாற்றலாகிச் செல்கின்றார்.

இதனால் யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் ஏற்படும் வெற்றிடத்திற்கே சாய்முரளி நியமிக்கப்பட்டுள்ளார்.

1991ஆம் ஆண்டு பிறந்த சாய்முரளி 2019ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சில் இணைந்து தற்போது வரை ரஷ்யாவின் மாநிலம் ஒன்றில் இந்தியத் தூதரகத்தின் கொன்ஸிலர் ஜெனரலாகப் பணியாற்றுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# சிதைந்த நிலையில் பெண்ணின் சடலம்

வீட்டில் தனியாக வசித்து வந்த பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அஹுங்கல்ல – எகொடமுல்ல பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்தே மேற்படி பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

65 வயதுடைய பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த பெண்ணைப் பல நாள்களாகக் காணவில்லை எனவும், அந்த வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசுகின்றது எனவும் அப்பகுதி மக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்தநிலையில் மேற்படி பெண் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பெண்ணின் சடலம் சிதைந்த நிலையில் காணப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அஹுங்கல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



### மட்டு. செங்கலடியில் வியாழேந்திரனுக்கு எதிரான

# இருவரின் சாகும் வரையான உண்ணாவிரதம் நேற்று இணக்கமாக முடித்து வைக்கப்பட்டது

## பிரதேச செயலாளரின் வாக்குறுதியையடுத்து

(கனகராசா சரவணன்)

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனுக்கு எதிராக சவப் பெட்டியுடன் இரண்டாவது நாளாக தொடர் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வந்த இருவரது கோரிக்கையையும் பிரதேச செயலாளர் நேற்று செவ்வாய்க்கிழமை ஏற்றுக் கொண்டு, போராட்ட இடத்திற்குச் சென்று அவர்களுக்கு வாக்குறுதி அளித்தார். அதை அடுத்து அவர்கள் உண்ணாவிரதப் போரட்டத்தைக் கைவிட்டனர். அவர்களுக்கு பிரதேச செயலாளரே குளிர் பானம் கொடுத்து உண்னாவிரதத்தை முடித்து வைத்தார்.



இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் அதிகாரத் துஷ்பிரயோத்துக்கு ஆளாகாமல் பிரதேச செயலாளர் செயற்பட வேண்டும் என வலியுறுத்தியும், செங்கலடி பிரதேச அமைச்சரிடமிருந்து ஏறாவூர் பற்று பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர் பதவியைப் பறிக்குமாறு கோரியும், கல், மண், கிறவல் அகழ்வில் சட்ட ரீதியாக ஈடுபடுவரும் இருவர் சவப் பெட்டியுடன் மட்டு செங்கலடி பிரதேச செயலகத்திற்கு அருகில் சாகும்வரை உண்ணாவிரதே போரட்டம் ஒன்றை நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பித்து தொடர் போரட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் நேற்று இரண்டாவது நாளாக இடம்பெற்றுவந்த போராட்ட இடத்திற்கு ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர், உதவி செயலாளரணில், 2024 செயலணி கிழக்கு மாகாண தலைவர் க. மோகன் உள்ளிட்டோர் சென்று உண்ணாவிரதப் போரட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் இனி அரசியல் தலையீடின்றி கல், மண், கிறவல் என்பனவற்றுக்கு சட்டரீதியாக அனுமதி பெற்று அகழ்வில் ஈடுபட்டுவருபவர்களுக்கு புதிப்பித்தல் போன்ற நடவடிக்கையைச் செய்து தருவார்கள் என உத்தரவாதம் அளித்தனர்.

இதனை தொடர்ந்து உண்னாவிரத போரட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு பிரதேச செயலாளர் குளிர்பானம் கொடுத்து உண்ணாவிரதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார்.



# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி ஆய்வறிக்கை வெள்ளியன்று நீதிமன்றில்

(ந.லோகதயாளன்)

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பில் தொல்லியல் பேராசிரியர் மேற்கொண்ட ஆய்வு அறிக்கை நாளை மறுதினம் 23 ஆம் திகதி நீதிமன்றில் எடுக்கப் படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாயில் இனம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளினுடையது எனச் சந்தேகிக்கும் 40 மனித உடற்பாகங்கள், உடைகள் மற்றும் இலக்கத் தகடுகள் இதுவரை மீட்கப்பட்டன.

இந்த மனித எச்சங்கள் தொடர்பிலும், மேலும் எந்தளவு பிரதேசத்தில் எத்தனை உடல்கள் இருக்கலாம் என்பது தொடர்பிலும், மீட்கப்படும் உடல் பாகங்கள் எத்தனையாம் ஆண்டிற்கு உரியவை என்ற விடயம் சம்பந்தமாகவும் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா ஆய்வில் ஈடுபட்டிருந்தார். இந்த ஆய்வின் அறிக்கை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை நாளை மறுதினம் 23 ஆம் திகதி மன்றின் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# யுத்தத்திற்கு மத்தியிலும் தமிழர்களின் தேசம் பொருளாதார நெருக்கடியின்றி நிமிர்ந்தது!

## உண்மை, நேர்மை, அர்ப்பணிப்பு உள்ள தலைவர் ஒருவர் எமக்கு இருந்தமைதான் காரணம் என்கிறார் கஜேந்திரன்

"தமிழர் தேசத்தின் மீது பாரிய இன அழிப்பைக் கட்டவிழ்த்துவிட்ட சிங்கள தேசத்துக்கு எதிராகவும் வடக்கு, கிழக்கு தமிழர் தேசத்தைப் பாதுகாத்து, இன அழிப்பை தடுக்கவுமே பிரபாகரன் ஆயுதப்போராட்டத்தை நடத்தியிருந் தார்." என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

20 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு நிர்வாக அரசை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நடத்தியிருந்தார். அவர் பொருளாதார ரீதியாக தமிழர் தேசத்தை ஸ்திரப்படுத்தியிருந்தார்.

மக்கள் பொருளாதாரத்தின் செழு மையை அனுபவித்ததுடன், ஒரு பாது காப்பான சூழலில் வாழ்ந்திருந்தனர். 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறை வடைந்திருந்த தருணத்தில் தமிழீழ வைப்பகத்தில் இருந்து மீட்கப்பட்ட தங் கங்கள் ஊடாக அதனை புரிந்துக் கொள்ள முடியும்.



நீங்களும் யுத்தம் செய்தீர்கள். உங்களின் இன அழிப்பில் இருந்து தப்பித்துக்கொள்ள எங்களது தேசமும் யுத்தம் செய்தது. யுத்த சூழல் மற்றும் பொருளாதார தடைகளுக்கு மத்தியில் எங்களது தேசம் பொருளாதார ரீதியில் வளர்ச்சிக்கண்டிருந்தது.

யுத்த காலத்தில் எமது தேசத்தில் பொருளாதார நெருக்கடி இல்லாமைக் குப் பிரதானமான காரணம் உண் மையும், நேர்மையும் அர்ப்பணிப்பும் உள்ள தலைவர் ஒருவர் எமக்கு இருந் தார். யுத்தம் நிறைவடைந்து 14 ஆண் டுகள் கடந்துள்ளன. சர்வதேசத்திடம் உதவிகள் மற்றும் கடன்களை பெற் றுள்ளீர்கள்.

ஆனால், நாட்டை அதலபாதாளத்துக் குள் தள்ளியுள்ளார்கள். உங்களது தலைவர்களிடம் நேர்மையும் அர்ப் பணிப்பும் இல்லை. தீவில் வாழும் அனைத்து சமூகங்களையும் அரவ ணைத்துச் செல்லும் மனப்பான்மை இல்லை. அதனால்தான் இத்தகைய மோசமான நிலையில் இலங்கைத் தீவு உள்ளது.

உங்களுடைய போக்கில் ஒரு மாற் றத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழர்கள் இந்த தேசத்தை கட்டியெழுப்புவதில் பங்கேற்க தயாராக இருக்கிறோம்.

ஆனால், ஒற்றையாட்சி முறைமை ஒழிக்கப்பட்டு, தமிழர்கள் மீதான ஒடுக்குமுறைகள் ஒழிக்கப்பட்டு, தமி ழர்கள் சிங்கள தேசம் போன்று சமத் துவமாக வாழக்கூடிய சமஷ்டி அரச மைப்புக் கொண்டுவரப்பட வேண்டும்." என்றார்.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடு வங்குரோத்து நிலையை அடைந்து பொருளாதார நெருக்கடியில் தள்ளாடுகின்றது.

'வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி, நாட்டுக்காகச் சேர்ந்து கஷ்டங்களை அனுபவியுங்கள், வேறு வழி இல்லை!' – என்று நாட்டு மக்களுக்கு அரசும் அதிகார வர்க்கமும் இறுக்கமான ஆலோசனைகளை முன்வைக்கின்றன.

பொதுமக்கள் வாயை மூடி, வயிற்றைக் கட்டி, பசியின் உறுத்துதலைப் பொறுத்து, தாங்கி, நெருக்கடியை எதிர் கொள்கின்றனர்.

ஆனால் அவர்களுக்கு ஆலோசனை – உபதேசம் – செய்யும் மத்திய வங்கியின் அதிகாரிகளோ, இதுதான் சந்தர்ப்பம் என்று கண்மண் தெரியாமல் அரச நிதியை சூறையாடுகின்றார்கள் என்று நாடாளுமன்றத்தில் நேற்று செய்திகள் அம்பலமாகி இருக்கின்றன.

பிரதான எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த – குறிப்பாக லக்ஷ்மன் கிரியெல்ல, விமல் வீரவன்ஸ போன்றோர் – இது பற்றிய விடயங்களை நாடாளுமன்றத்தில் நேற்றுப் போட்டு உடைத்து இருக்கின்றனர். இது தொடர்பில் எதிர்க்கட்சிகள் நேற்று அங்கு வெளியிட்ட சில தகவல்கள், எழுப்பிய கேள்விகள் நியாயமானவை. அவற்றைப் பார்ப்போம்.

+ நாடு வங்குறோத்து நிலைக்குச் செல்லும்போது அது தொடர்பாக மத்திய வங்கி ஆளுநராலோ, நிதி அமைச்சின் செயலாளராலோ நாட்டுக்கோ, நாடாளுமன்றத்துக்கோ முற்கூட்டித் தகவல் வெளிப்படுத்தப்படவில்லை. அதை நாட்டுக்கும் மக்களுக்கும் வெளிப்படுத்தாமல் கடைசி வரை ஒளித்தவர்கள் மத்திய வங்கி அதிகாரிகள்தான்.

+ நாட்டை வங்குறோத்து அடையச் செய்த மத்திய வங்கி அதிகாரிகளின் மாதச் சம்பளம் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்காமல் நூற்றுக்கு 70 வீதத்தால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. மத்திய வங்கியின்உயர்மட்டஅதிகாரிகளின்சம்பளத்தை பல லட்சக்கணக்கான ரூபாயால் அதிகரித்துள்ளமை எந்தளவுக்கு நியாயமானது?

+ மத்திய வங்கியின் பிரதி ஆளுநரின் சம்பளம் 7 லட்சத்து 12 ஆயிரம் ரூபா வரை அதிகரித்திருக்கிறது.

அதேபோன்று கீழ் மட்டத்தில் அலுவலக உதவியாளர்களின் சம்பளத்தை 75 ஆயிரம் ரூபா வரையில் அதிகரித்துக் கொண்டிருக்கின்றனர்.

+ மத்திய வங்கியின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்ட போது 'மத்திய வங்கியின் புதிய சட்டத்துக்கு அமைய சம்பளம் அதிகரிக்கப்பட்டதாகவும்,அது மத்திய வங்கியின் சுயாதீனம்' என்றும் அமைச்சர் பதிலளித்துள்ளார். தங்களுக்குத் தாங்களே சம்பள உயர்வை முடிவெடுக்கும் அளவுக்கா சுயாதீனத்தை வழங்குவது?

+ இந்தச் சம்பள அதிகரிப்பு சட்ட விரோதமாகும். இதனைத் தடுக்காவிட்டால், எதிர்காலத்தில் அரசு மாறும்போது அந்தப் பணத்தை அவர்களிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம்.

+ மக்களின் இடுப்புப்பட்டியை இறுக்கிக் கொள்ளுமாறும், காரியாலயங்களில் ஆளணியை குறைக்குமாறும் முழு நாட்டுக்கும் ஆலோசனை வழங்கியவர்கள் இவர்கள்தான். அவர்கள் எப்படி தங்களுக்குத் தாங்களே சம்பளத்தை இப்படி அதிகரிக்க முடியும்?

– இப்போது சொல்லுங்கள் 'ஊருக்கடி உபதேசம், உனக்கில்லையடி!' என்று நான் புலம்புவது தப்பில்லைத்தானே...?

கரண்டிதம்கையில்இருப்பதால்மத்திய வங்கி எண்ணம் போல் உணவைப் பரிமாறிக் கொள்கிறது. ஜனாதிபதியின் பொருளாதார மீட்சி எந்தளவுக்கு முன்னேற்றமடைந்துள்ளது என்பதை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

## 13இற்கு முடிவு கட்டாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாற்றுவது பற்றி கருத்தாடல் இடம்பெறுவது நாட்டில் மீண்டும் பிரச்சினைகளுக்கே வழிவகுக்கும். ஜனாதிபதி முறைமை மாற்றம் பற்றி பேசுவதற்குத் தற்போதைய ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை இல்லை."

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால மேலும் கூறியதாவது:–

"ஜனாதிபதி முறைமையில் மாற்றம் செய்யவேண்டுமெனில் அரசமைப்பு மறுசீரமைப்பு அவசியம். நாட்டில் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கக் கூடிய விடயம் இதுவாகும் என்பதால் எடுத்த எடுப்பிலேயே எதனையும் செய்துவிட முடியாது.

ஜனாதிபதி முறைமையால்தான் இந்த நாடு சமஷ்டி முறைமைக்குச் சென்று, பிரிவினைவாதம் தலைதூக்கியது. எனவே, அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நீக்காமல், ஜனாதிபதி முறைமையை நீக்க முடியாது.

ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு, அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்கினால் ஆளுநர் நியமனம் மற்றும் முதலமைச்சருக்குள்ள அதிகாரம் எவை என்பன தொடர்பிலும் பிரச்சினை உள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் போன்ற தேசிய ரீதியிலான தேர்தலொன்றின்போது மக்கள் நீதிமன்றம் முன்சென்று, அவர்களிடம் யோசனையை முன்வைத்து, கலந்துரையாடியே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தற்போதைய ஜனாதிபதிக்கு இதனைச் செய்வதற்குரிய மக்கள் ஆணை இல்லை. அரசியல் இலாபம் பெறும் நோக்கிலேயே இது தொடர்பான கருத்தாடல் இடம்பெறுகின்றது."

– என்றார்.

## அரசமைப்புக்கு முரணாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது நீதிமன்ற அறிவிப்புக்களை அறிவித்தபோது, அரசமைப்பின் 121 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட " உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்" தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்குக் கிடைக்கப் பெற்றிருக்கின்றது என்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ சபைக்கு அறிவித்தார்.

மேற்படி, சட்டமூலத்தின் அரசமைப்பு ரீதியான செல்லுபடியாகும் தன்மை பற்றிய உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை பிரதி சபாநாயகர் பின்வருமாறு வாசித்தார்.

"பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் 3,42,53 மற்றும் 70 ஆம் ஏற்பாடுகள் அரசமைப்பின் 12 (1) ஆம் உறுப்புரையுடன் இணங்காததுடன், நாடாளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடன் அவை நிறைவேற்றப்படுதல் வேண்டும். எனினும், அந்த ஏற்பாடுகள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அரசமைப்பு முரண் என்ற தன்மை நீங்கும்.

அத்துடன் சட்டமூலத்தின் 4ஆம் ஏற்பாடு உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் திருத்தப்படுதல் வேண்டும். 72 (1) ஆம் ஏற்பாடு அரசமைப்புடன் இணங்காததுடன் விசேட பெரும்பான்மையுடனும் மற்றும் மக்கள் ஆணையின்போது மக்களால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

அந்த ஏற்பாடுகள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அந்த இணங்காமை நீங்கும். அதற்கிணங்க 72(2) ஆம் ஏற்பாடும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இணங்க திருத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

அத்துடன் சட்டமூலத்தின் 75(3) ஆம் ஏற்பாடு அரசமைப்பின் 3 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 4 (இ) உறுப்புரையை மீறுவதுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனும் மக்கள் ஆணையின்போது அவை அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். அந்த வாசகம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அந்த இணங்காமை நீங்கும்.

சட்டமூலத்தின் 83 (7) ஆம் ஏற்பாடு விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அந்த வாசகம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொண்டால் அந்த இணங்காமை நீங்கும்.

உயர்நீதிமன்றத்தால் சட்டமூலத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்களுக்கு இணங்க மாத்திரம் சாதாரண பெரும்பான்மையுடன் சட்டமூலம் சட்டமாக நிறைவேற்ற முடியும் என உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது."

– என்றார்.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ 2024.01.10 ஆம் திகதி உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தார்.உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராக 30 இற்கும் அதிகமான அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

அரசால் தயாரிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் இலங்கையின் மனித உரிமைகள் அம்சங்களுக்கு எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும் என்று சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு கடும் அதிருப்தி வெளியிட்டிருந்தது. அத்துடன் கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் இந்தச் சட்டமூலம் தொடர்பில் கரிசனை வெளிப்படுத்தி சட்டமூலத்தை மீளாய்வு செய்யுமாறு அரசிடம் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

ஜூலி சங் ஊடகப் பிரதானிகள், ஊடகவியலாளர் மற்றும் சிவில் சமூக அமைப்பினருடனான சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"இலங்கை என்பது அமெரிக்காவின் பிராந்தியமல்ல. எமது நாடு இறையாண்மையுடைய சுயாதீன நாடாகும். எனவே எமது நாட்டுக்குள் அரசமைப்பு சபையில் நிறைவேற்றப்படும் சட்ட திட்டங்கள் தொடர்பான உரிமை சட்டத்தைத் தயாரிக்கும் நிறுவனமான நாடாளுமன்றத்துக்கே உரியது.

அதற்கமைய இது தொடர்பான திருத்தங்கள் கடந்த வாரம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டன.

07▶

# கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கான உணவு கொடுப்பனவை அதிகரிக்க முடிவு

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தகவல்



தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களின் உணவுக்கான கொடுப்பனவை அடுத்த மாதம் முதல் 3 ஆயிரம் ரூபாவால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிரணி எம்.பி.யான டலஸ் அழகப்பெரும எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே, கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"கல்வியியற் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு, 10 ஆயிரம் ரூபா கடன் பெறுவதற்கான யோசனை ஒன்று ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டது. எனினும் அதற்கு மாணவர்கள் விருப்பம் தெரிவித்திருக்கவில்லை.

இந்தநிலையில், அவர்களுக்கான உணவுக்கு தற்போது வழங்கப்படும் கொடுப்பனவை 5 ஆயிரம் ரூபாயில் இருந்து 8 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கான யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டது.

நிதி பற்றிய குழு கடந்த வாரம் அதற்கு அனுமதி வழங்கியதுடன், கடந்த திங்கட்கிழமை அதனை உறுதிப்படுத்தியது. இதற்கமைய, 8 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அடுத்த மாதம் முதல் கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களுக்கு வழங்கப்படும்."– என்றார்.

# பருத்தித்துறையில் நேற்றிரவு கொடூரம் வாள் வெட்டில் 2 மாணவர்கள் படுகாயம்

பருத்தித்துறை பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் இரண்டு மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

அவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு இடம்பெற்ற இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த தும்பளையைச் சேர்ந்த இரகுநாதன் சுதாகர் (வயது 14), சுப்பர்மடத்தைச் சேர்ந்த சந்திரன் அனோஜன் (வயது 14) ஆகியோரே பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வீதியால் சென்றவர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## சுமந்திரனின் அடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்பது தொடர்பான விசாரணையை உயர்நீதிமன்றம் நேற்று முடித்துக் கொண்டது.

இது தொடர்பான உத்தரவு விரைவில் வழங்கப்படும் என உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனு நீதியரசர்கள் பிரியந்த ஜெயவர்த்தன, ஷிரான் குணரட்ண, அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற ஆயத்தின் முன்னால் நேற்று பரிசீலிக்கப்பட்டது.

அப்போது அரசுத் தரப்பில் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் தானே நேரடியாகப் பிரசன்னமாகி வாதிட்டார்.

மனுதாரரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன்றில் பிரசன்னமாகி இருந்தார். அவர் சார்பில் சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ வாதிட்டார்.

மேற்படி சட்டத்தில் ஒப்பமிடும் சபாநாயகரின் பணி சட்டவாக்கல் சபையின் நடவடிக்கை, சட்டவாக்கல் சபை நடவடிக்கைகளில் நீதிமன்றம் தலையிட முடியாது, ஆகவே, இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்காமல் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சட்டமா அதிபர் பூர்வாங்க ஆட்சேபனை கிளப்பினார்.

அதனை மறுத்துரைத்த மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ நீதிமன்ற வழிகாட்டல்படி சட்டம் நிறைவேற்றப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்தும் சபாநாயகரின் நடவடிக்கை சட்டவாக்கல் ஏற்பாடு அல்ல, அது நிர்வாகச் செயற்பாடு, ஆகையினால் அதில் நீதிமன்றம் தலையிடலாம், நிர்வாக செயற்பாடுகளில் ஏற்படக்கூடிய தவறுகளுக்கு நீதிமன்ற மூலம் நிவாரணம், நீதி பெறுவது நீதித்துறையின் அடிப்படை என்று அவர் கூறினார்.

சுமார் இரண்டரை மணி நேர விசாரணைகளின் பின்னர் மனுவை மேற்கொண்டு விசாரணைக்கு ஏற்பதா என்பது தொடர்பான தமது தீர்ப்பைப் பின்னர் வழங்குவதாக அறிவித்து நீதியரசர்கள் வழக்கை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர்.

## இலங்கை அமெரிக்கா...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி....)

அவை நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பில் 14 நாட்களுக்குள் நீதிமன்றத்தை நாட முடியும். நீதிமன்றம் அவை தொடர்பில் பரிசீலனை செய்து, திருத்தங்களைப் பரிந்துரைக்கும்.

சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்துவதற்கான எந்தவொரு தேவையும் அரசுக்குக் கிடையாது. எவ்வாறிருப்பினும் இனங்களுக்கிடையிலும், மதங்களுக்கிடையிலும் ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான தேவை அரசுக்குக் காணப்படுகின்றது. தனிநபர் பாதிப்பு உள்ளிட்டவற்றை தவிர்ப்பதே இந்தச் சட்ட மூலத்தின் நோக்கமாகும்.

எனவே, எந்தவொரு பிரஜைக்கும் சமூக வலைத்தளத்தின் ஊடாக தத்தமது தனிப்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு எவ்வித தடையும் இல்லை." – என்றார்.

# சிறையிலிருந்து பிணையில் வந்த குடும்பஸ்தர் மீது துப்பாக்கிச்சூடு!

கொழும்பு, பொரளை – மகசின் சிறைச்சாலைக்கு முன்பாகவுள்ள ஆனந்த ராஜகருணா அடுக்குமாடி குடியிருப்புக்கு அருகில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் நபர் ஒருவர் காயமடைந்த நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அடுக்குமாடி குடியிருப்புக்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரியே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்றும் பொலிஸார் கூறினர்.

சம்பவத்தில் காயமடைந்தவர் அந்த அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் 38 வயதுடைய குடும்பஸ்தர் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

காயமடைந்த நபர் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டவர் என்றும், அவர் சில நாள்களுக்கு முன்னர் விளக்கமறியலில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கத்தரிக்கோலால் தாக்கப்பட்டு 19 வயது இளைஞர் கொலை!

கொழும்பு – கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இங்குருகொட சந்தியின் கால்வாய்க்கு அருகில் தலையில் கத்தரிக்கோலால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு – கிராண்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய ருவன் குமார என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இவர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும், பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## உயர் நீதிமன்றத்தின் பரிந்துரை

கடந்த 45 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீடாக அரசு கொண்டுவரப் பிரேரித்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் தொடர்பில் தனது அவதானிப்புக்கள் மற்றும் முடிவுகளை உயர்நீதிமன்றம் சபாநாயகர் மூலமாக நாடாளுமன்றத்திற்கு தெரியப்படுத்தி விட்டது.

இந்தச் சட்டமூலத்தின் சில பிரிவுகளை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு அவசியம் என்றும் -

இன்னும் சில பிரிவுகளை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதியையும் பெற வேண்டும் என்றும் -

உயர் நீதிமன்றம் தனது பரிந்துரையில் சுட்டிக்காட்டி உள்ளது. உயர்நீதிமன்றம் சுட்டியுள்ள இந்த தேவைப்பாடுகளை நிறைவு செய்ய முடியாத இடத்தில், சம்பந்தப்பட்ட பிரிவுகளை உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டல் படி நீக்கி அல்லது மாற்றி அந்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும் என்றும் உயர்நீதிமன்றம் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

பாதுகாப்புத் தரப்போ, ஆளும் தரப்போ தம்மிஷ்டப்படி 'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்கு அர்த்தம் கற்பிக்கும் வாய்ப்பை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு முழு அளவில் கட்டுப்படுத்தி இருப்பதாகத் தெரிகின்றது.

தொழிற்சங்கப் போராட்டங்கள், அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்ற - அரசமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்ட - அடிப்படை உரிமைகளை 'பயங்கரவாதம்' என்று அடையாளப்படுத்தி, அவற்றை இந்தச் சட்டத்தின் மூலம் அடக்குவதற்கு வாய்ப்பாக அமைந்தஇந்தச்சட்டமூலத்தின்பிரிவுகளுக்கு உயர்நீதிமன்றம் தனது பரிந்துரை மூலம் முடக்குப் போட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் விஜித் கே. மலலகொட, ஏ.எச்.எம்.டி.நவாஸ், ஏ.எல்.ஷிரான் குணரட்ண, அர்ஜுன ஒபயசேகர ஆகிய ஐவர் அடங்கிய ஆயமே இந்தப் பரிந்துரைகளை வழங்கி இருக்கின்றது.

கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, ஜே.வி.பியின் விஜித்த ஹேரத், முன்னிலை சோஷலிஸ்ட் கட்சியின் துமிந்த நாகமுவ ஆகியோரும் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான மையம், சோஷலிஸ்ட் இளைஞர் யூனியன் போன்றவையும் உட்பட 31 தரப்புகள் இந்தச் சட்டமூலத்தை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்திருந்தன.

மொத்தம் ஆறு நாள்கள் தொடர்ந்து இந்த மனுக்களை விசாரணை செய்த உயர்நீதிமன்றம், கடந்த இரண்டாம் திகதி விசாரணைகளைப் பூர்த்தி செய்திருந்தது. தற்போது தீர்ப்பின் விவரம் வெளிவந்துள்ளது.

சுமார் 76 பக்கங்களைக் கொண்ட உயர்நீதிமன்றத்தில் இந்தப் பரிந்துரை அல்லது தீர்ப்பு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்குப் பதிலாக இன்னொரு மோசமான சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசு தரப்பு எடுத்த முயற்சிக்குப் பெரும் பின்னடைவை தந்திருக்கிறது என்பதுதான் முதற்கட்ட அவதானிப்புத் தகவலாக வெளியாகி உள்ளது.

அரசு சமர்ப்பித்துள்ள சட்டமூலத்தின் மூலப்பிரிவுகளுடன் உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையை ஒவ்வொன்று ஒவ்வொன்றாக ஒப்பிட்டுப் பரிசீலித்தால் தான், உயர்நீதிமன்றத்தின் பரிந்துரை பல்வேறு தரப்புக்களும் இச்சட்டம் மூலம் தொடர்பில் கிளப்பிய சந்தேகங்கள், எதிர்ப்புகள், ஆட்சேபங்கள் தொடர்பான விடயங்களைக் கவனத்தில் எடுத்து, அத்தகையமோசமானநிலைக்குஇடமளிக்காமல் உறுதிப்படுத்தி உள்ளதா என்பதை அறிந்து கொள்ள முடியும்.

பெரும்பாலும் அதன் முழு விவரங்களையும் சம்பந்தப்பட்ட சட்ட வட்டாரங்கள் நிறைவானபரிசீலனையின்பின்னர்பெரும்பாலும் இன்று வெளியிடக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும்சிலஅடிப்படைவிடயங்களில் மக்களின் அடிப்படை உரிமைகளை மோசமாகப் பாதிக்கும் சட்ட ஏற்பாடுகளுக்கு கண்மூடித்தனமாக இடமளிக்க முடியாது என்பதை உயர்நீதிமன்றம் உறுதியாகப் பிரதிபலித்திருப்பதாக உயர்நீதிமன்ற பரிந்துரை தொடர்பில் உடனடியாக வெளியான அவதானிப்புக்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்தில் அரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு கிடையாது. சாதாரண பெரும்பான்மையே இப்போது உண்டு.

ஆதலால் உயர்நீதிமன்றம் செய்த அத்தனை பரிந்துரைகளையும் நடைமுறைப் படுத்தித்தான் இந்தச் சட்டமூலத்தை அரசு மேற்கொண்டு நிறைவேற்ற முடியும்.

தான் நினைத்த அடக்குமுறை ஏற்பாட்டு விடயங்களை இந்தச் சட்டமூலம் வாயிலாகநடைமுறைக்குக்கொண்டுவரமுடியாவிட்டால், நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி விட்டு, இந்தப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றும் தனது திட்டத்தை ஆளுந்தரப்புக் கைவிட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.




# தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்தமையால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்குமாறும், மூவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதை கண்டித்தும் இராமேஸ்வரம் மீனவர்கள் நான்காவது நாளாகவும் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரையிலான பேரணியினை தமிழக மீனவர்கள் நேற்று முன்னெடுத்தனர்..

அரச ஆவணங்களை மீளக் கையளிக்கும் நோக்கில், மீனவர்கள் இந்த பேரணியை முன்னெடுத்தனர்.

இலங்கையில் விளக்கமறியலில் உள்ள மீனவர்களையும், பிடிக்கப்பட்ட படகுகளையும் மீட்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் வாக்குறுதி வழங்கியதை அடுத்து, இராமேஸ்வரம் மீனவர்கள் தமது பேரணியை தற்காலிகமாக கைவிட்டனர்.

எனினும், ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு கச்சதீவு திருவிழாவை புறக்கணிப்பதாக மீனவர்கள் கூறினர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் இலங்கை கடற்பரப்பிற்குள அத்துமீறி நுழைந்த 88 இந்திய மீனவர்கள் 12 படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.










# தமிழக - கர்நாடக எல்லைகளில் பாதுகாப்பு குறித்து ஆலோசனை



எதிர்வரும் மக்களவைத் தேர்தலையொட்டி, தமிழக - கர்நாடக எல்லையான பாலாறு பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வது குறித்து மேட்டூர் ஆட்சியர் தலைமையில் அதிகாரிகள் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர்.

மேட்டூர் ஆட்சியர் அலுவலகத்தில் தமிழக - கர்நாடக பொலிஸார் மக்களவைத் தேர்தலை முன்னிட்டு எல்லையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனை நடைபெற்றுள்ளது.

தேர்தலை எதிர்கொள்வது குறித்து அரசியல் கட்சியினர் தற்பொழுது தெருமுனைப் பிரச்சாரம், ஆலோசனைக் கூட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், அதிகாரிகள் வாக்கு எண்ணும் மையம், வாக்குச்சாவடி அமைப்பது, பாதுகாப்பு ஏற்பாடு செய்வது குறித்த பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

சேலம் மாவட்டத்துக்கு உட்பட்ட மேட்டூர் தொகுதியானது, தருமபுரி மக்களவைத் தொகுதியில் இணைந்துள்ளது. இந்த நிலையில், விரைவில் மக்களவை தேர்தல் நடைபெறவுள்ளதால், மாநில எல்லைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனைக் கூட்டங்கள் நடத்த தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

சேலம் எஸ்.பி. அருண் கபிலன் தலைமையில் மேட்டூர் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தமிழக கர்நாடகா பொலிஸ் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் தேர்தலையொட்டி மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

# ரஷ்யா - உக்ரைன் யுத்த களத்தில் கட்டாயப்படுத்தப்படும் இந்தியர்கள்

ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு இடையிலான போரில் போரிட இந்தியர்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர் என அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

ரஷ்ய இராணுவம் சார்பில் 'இராணுவ உதவியாளர்கள்' என பணியமர்த்தப்பட்ட இந்தியர்கள் எல்லைப் பகுதியில் துப்பாக்கி ஏந்தி போரிட வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகி உள்ளனர்.

ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர் கடந்த 2022 பெப்ரவரியில் தொடங்கியது. இதில் உக்ரைன் இராணுவத்துக்கு ஆதரவாக பல்வேறு நாடுகளை சேர்ந்த தன்னார்வலர்கள், உக்ரைனின் பிராந்திய பாதுகாப்புக்கான சர்வதேச படையில் அங்கம் வகித்து வருகின்றனர்.

இந்த நிலையில், ரஷ்ய தரப்பில் இந்தியர்கள் சிலர் எல்லையில் போரிட்டு வருகின்றனர் என தகவல் வெளியாகி உள்ளது. இவர்கள் உத்தர பிரதேசம், குஜராத், பஞ்சாப், ஜம்மு காஷ்மீர் பகுதியை சேர்ந்தவர்கள்.

ஆயுதம் மற்றும் வெடிமருந்து பயன்பாடு குறித்த அடிப்படை பயிற்சியை ரஷ்ய இராணுவம் தங்களுக்கு வழங்கி, உக்ரைன் நாட்டை அண்மித்துள்ள எல்லைப்பகுதியான Rostov-on-Don பகுதியில் உள்ள முகாமில் கடந்த ஜனவரி மாதம் முதல் பணியமர்த்தி உள்ளதாக பாதிக்கப்பட்ட இந்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

2023 நவம்பரில் ரஷ்யா சென்ற இந்தியர்கள் இராணுவ உதவியாளர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர். மாதம் 1.95 லட்சம் ரூபா ஊதியம் மற்றும் 50 ஆயிரம் ரூபா போனஸ் என அவர்களிடம் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருந்தும் முதல் இரண்டு மாதத்துக்கான 50 ஆயிரம் ரூபா போனஸ் மட்டும் அவர்கள் பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் இருந்து சுமார் இரண்டரை மணி நேர பயணத்துக்கு பின்னர் இராணுவ முகாம் ஒன்றுக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர். உதவியாளர்களாக தான் பணி என இந்திய முகவர்கள் அவர்களிடத்தில் உறுதி அளித்துள்ளனர். அங்கு தங்கியிருந்த அவர்களுக்கு ஆயுத பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து ஜனவரி 4 ஆம் திகதி அன்று அவர்கள் எல்லைப் பகுதிக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர். அப்போது முதல் அவர்கள் அங்கேயே இருந்து வருகின்றனர்.



"பாதிக்கப்பட்ட இந்தியர்களில் ஒருவர் அங்கிருந்து தப்பிக்க முயன்றுள்ளார். இருந்தும் அவரை பிடித்த ரஷ்ய படையினர், மிரட்டல் கொடுத்து போரிட சொல்லி பணித்துள்ளனர். '5 மீட்டர் இடைவெளி விட்டு நடந்தால் குண்டு தாக்குதலில் இருந்து தப்பிக்கலாம் என இராணுவ அதிகாரி சொல்வார். நாங்களும் அப்படியே நடந்தோம். எங்களுக்கு வழிகாட்டியாக வந்த உள்ளூரை சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். அதை பார்த்ததும் நான் அதிர்ச்சி அடைந்தேன். கடந்த ஜனவரி 22 ஆம் திகதி யுத்தக் களத்தில் இருந்து தப்பி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை பெற்று வருகிறேன். உதவிக்காக இந்திய தூதரகத்தை அணுகினாலும் பலன் இல்லை" என பாதிக்கப்பட்ட ஒருவர் தெரிவித்துள்ளார்.

"இந்தியர்கள் மட்டுமல்லாது ஏனைய நாடுகளை சேர்ந்தவர்களும் எல்லையில் போரிட வேண்டிய நிர்பந்தத்துக்கு ஆளாகி உள்ளனர். அவர்களது பாஸ்போர்ட் பறிக்கப்பட்டுள்ளது. அவர்களின் உயிர் அச்சுறுத்தலில் உள்ளது. இராணுவ உதவியாளர்கள் என சொல்லி ரஷ்ய படையினர் இப்படி செய்துள்ளனர்" என்று ரஷ்யாவில் உள்ள முகவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த புகார் குறித்து முறையாக அவதானித்து வருவதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.






# வடகொரிய ஜனாதிபதிக்கு கார் பரிசளித்தார் புடின்

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது உள்நாட்டு தாயாரிப்பு கார் ஒன்றினை வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுக்கு பரிசாக வழங்கியுள்ளார்.

புடின் அந்த காரினை தனிப்பட்ட பயன்பாட்டிற்காக, வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுக்கு பரிசளித்துள் ளார் என வடகொரிய ஊடகமொன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

அதன்போது, புடினின் இந்த பரிசினை கிம்மின் சகோ தரி கிம் யோ ஜாங் ஏற்றுக் கொண்டார் எனவும் இது தொடர்பில் அவர் புடினுக்கு நன்றி தெரிவித்தார் என்றும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

எனினும் பரிசாக வழங்கப்பட்ட கார் எவ்வாறு வடகொரி யாவுக்கு கொண்டு செல்லப்பட்டது என்பது தொடர்பன தக வல்கள் வெளிவரவில்லை என கூறப்படுகிறது.

அதேவேளை, வடகொரியாவுக்கு ஆடம்பரப் பொருள்களை வழங்குவதைத் தடை செய்யும் ஐ.நா.வின் தீர்மானத்தை இது மீறக்கூடும் என்று விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், புடின் அளித்த பரிசு இருநாடுகளின் தலைவர்களுக்கிடையேயான தனிப்பட்ட உறவைக் காட்டு வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




# தென் கொரிய மருத்துவர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்





தென் கொரியாவில் மருத்துவர்கள் முன்னெடுத்துள்ள வேலை நிறுத்த போராட்டத்தால் அறுவை சிகிச்சைகளும் மருத்துவ சேவைகளும் தடைப்பட்டுள்ளன.

தென் கொரிய அரசாங்கத்தின் மருத்துவ கொள்கைக ளுக்கு எதிர்ப்பு தெரிவித்து மருத்துவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால், நோயாளர்கள் கடும் இன்னல்களுக்கு ஆளாகி யுள்ளனர்.

தென் கொரியாவில் மருத்துவர் – நோயாளி விகிதங்கள் மிகக் குறைவாக உள்ளதால், பயிற்சி மருத்துவர்களை பணி களில் இணைக்கும் திட்டத்தை அரசாங்கம் கொண்டுள்ளது.

தென் கொரியா மிகவும் தனியார்மயமாக்கப்பட்ட சுகா தார அமைப்பைக் கொண்டுள்ளது. இதில் பெரும்பாலான நடைமுறைகள் காப்பீட்டுக் கட்டணங்களுடன் இணைக்கப் பட்டுள்ளன. மேலும் 90 வீதத்துக்கும் அதிகமான மருத்து வமனைகள் தனியாருக்கு சொந்தமானவை.

அங்குள்ள மருத்துவர்கள் உலகிலேயே அதிக ஊதியம் பெறுபவர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், நாட்டில் வைத்தியர்களின் எண்ணிக் கையை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இவ்வாறு பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக் கின்றன.

எவ்வாறாயினும், தென் கொரிய சுகாதார அதிகாரிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள மருத்துவர்களை பணிக்குத் திரும்புமாறு வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உத்தேச கடற்றொழில் சட்டம் மீனவர் சமூகத்தின் உரிமைகளுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது

## கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

“உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் உதவியுடன் நன்னீர் மீன் வளர்ப்பு அபிவிருத்தி செய்யப்படும். உத்தேச கடற்றொழில் சட்டத்தின் ஊடாக மீனவ சமூகத்தின் உரிமைகள் பாது காக்கப்படும். அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.”

– இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“திருத்தப்பட்ட புதிய கடற்றொழில் சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள் வதற்குத் தேவையான ஏற்பாடுகள் தற் போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மீன்பிடித் தொழில் வளர்ச்சியின் மூலம் மீன் விளைச்சல் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உத்தேச கடற்றொழில் சட்டமூலம் தொடர்பில் மீனவத் தொழிற்சங்கங்க ளுக்கு அறிவிக்கப்பட்டு அவர்களின் கருத்துக்களை உள்வாங்கி, திருத் தங்களைச் செய்து, அதனைப் நாடாளு மன்றத்தில் முன்வைப்பதற்குத் தேவை யான பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. உரிய சட்டத்தின் மூலம் மீனவ மக்களின்



உரிமைகள் பாதுகாக்கப்படுவதோடு, அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என உறுதியளிக்கிறோம். வெளிநாட்டுக் கப்பல்கள் மீன்பிடிக்காக இலங்கைக்கு வருவதற்கு இதன்மூலம் வழி ஏற்படும் என்று தெரிவிக்கப்படும் கருத்துக்களில் உண்மையில்லை.

மேலும், மீன்பிடித் தொழிலின் வளர்ச் சிக்காக தனியார் துறை முதலீடுகளை எதிர்பார்த்துள்ளோம். மேலும், வெளிநாட்டு முதலீடுகளைப் பயன் படுத்தி மீன்பிடித் துறையை மேம் படுத்துவதே எமது நோக்கமாகும். உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் உதவியுடன் மீன்வளர்ப்பு நடவடிக் கைகளும் முன்னெடுக்கப்படுகிறன.

மேலும், அதிகரித்து வரும் கடல் வெப்பம் மற்றும் சட்டவிரோத மீன்பிடித் தலால், உலகில் மீன் வளம் குறைந்து வருகிறது. தற்போது நாடளாவிய ரீதியில் நீர்வாழ் விலங்குகளின் உணவுக்காக இறால், நண்டு வளர்ப்பு மற்றும் கடற் பாசி வளர்க்கும் பணிகளும் முன்னெடுக் கப்பட்டுள்ளன.

இதேவேளை, நீர்கொழும்பு மீனவர் களின் மீன் சந்தை விவகாரத்திற்கு உரிய தீர்வு எட்டப்பட வேண்டும். நீர்கொழும்பு மீனவர்கள் கார்டினலின் வாசஸ்தலத்திற்கு முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டம் தொடர்பில் அறியக் கிடைத்தது. அது கத்தோலிக்க திருச் சபைக்கும் மீனவர்களுக்குமான பிரச் சினை. இருந்த போதிலும், அது குறித்து எனது கவனத்திற்கு கொண்டுவரப் பட்டுள்ளது.

எங்களுக்கு நேரடியாக அந்த விடயம் சம்பந்தம் இல்லாவிட்டாலும் கடற்றொ ழில் மக்கள் என்ற வகையில் ஒரு தார்மீகப் பொறுப்பு எனக்கும் இருக் கிறது. அந்த வகையில் அங்கு நேரடி யாகச் சென்று, சம்பந்தப்பட்ட தரப்பு களைச் சந்தித்து அவர்களுடன் கலந்து ரையாடி ஒரு சுமூகமான, நீதியான தீர்வைப் பெற்றுக்கொடுப்பேன்.” – என்றார்.

# தாதியர் வேலைவாய்ப்புப் பெற்று 236 பேர் இஸ்ரேலுக்குப் பயணம்

தாதியர் வேலைவாய்ப்பிற்காக இந்த ஆண்டில் முதல் 50 நாள்களில் 236 பேர் இஸ்ரேலுக்கு பயணித்துள்ள னர்.

இந்த நிலையில், இஸ்ரேலில் வேலைவாய்ப்புப் பெற்ற 149 பேருக் கான விமானப் பயணச்சீட்டுகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன. இதில் 54 பேர் தாதியராகக் கடமையாற் றவுள்ளனர்.

இவர்கள் இன்றும், நாளையும் இஸ் ரேலுக்கு பயணிக்கவுள்ளனர்.



# ‘யுக்திய’ சுற்றிவளைப்பு நடவடிக்கையில் மேலும் 760 சந்தேகநபர்கள் கைதாகினர்

யுக்திய சுற்றிவளைப்பில் மேலும் 760 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட 630 சந்தேகநபர்களும் குற்றத்தடுப்புப் பிரிவினால் பட்டியலிடப்பட்ட 130 சந்தேக நபர்களும் அடங்குகின்றனர் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஹெரோயின், ஐஸ், கஞ்சா, மாவா மாத்திரைகள் உள்ளிட்ட பல போதைப்பொருள்களையும் இந்த சுற்றிவளைப்பின் போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில், பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகம் மற்றும் பொலிஸ் விசேட பணியகத்தின் பட்டியலில் இருந்த 15 சந்தேகநபர்களும்,



புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பப்பட்ட 12 சந்தேக நபர்களும், தடுப்புக்காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட 15 சந்தேகநபர்களும் உள்ளடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப விவசாயம் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம்

ஐ. நா. உணவு, விவசாய அமைப்பின் ஆசிய, பசுபிக் பிராந்திய மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு.

“இலங்கையில் கடந்த பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதில் விவசாயம் பாரிய பங்களிப்பை ஆற்றியது. நாட்டை விரைவாக மீளக் கட்டியெழுப்பக் கூடிய இரண்டு பிரதான துறைகளாக விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறை என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஆரம்பமான ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய மாநாட்டின் 37 ஆவது அமர்வின் ஆரம்ப அமர்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கூ டோங்யுவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அங்கம் வகிக்கும் 46 நாடுகளில் அமெரிக்கா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட 34 நாடுகளின் இராஜதந்திரிகள் மற்றும் பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் ஆரம்பமான மாநாடு இன்று நிறைவடைகிறது.

2022 இல் பங்களாதேஷ் இந்த மாநாட்டை நடத்தியது. எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு வரை ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஆசிய-பசிபிக் பிராந்தியத்தின் தலைமைப் பொறுப்பு இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

1955ஆம் ஆண்டில் 2 ஆவது மாநாட்டை இலங்கை நடத்தியதுடன், 69 ஆண்டுகளுக்குப் பிறகு இம்முறை இலங்கை மீண்டும் இந்த மாநாட்டை நடத்துவது விசேட அம்சமாகும்.

“விவசாய உணவுக் கட்டமைப்பில் மாற்றம்” என்ற தொனிப் பொருளில் நடைபெறும் இந்த ஆண்டு மாநாட்டில், சத்தான உணவு உற்பத்தி, உணவு நுகர்வுப் பாதுகாப்பு, உணவு உற்பத்தியை அதிகரித்தல், சுற்றுச்சூழல் பாதுகாப்பைப் பேணுதல், பசுமைவீட்டு வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துதல், பிராந்திய நாடுகளில் காலநிலை மாற்ற அபாயத்தைக் கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பல துறைகள் குறித்து கவனம் செலுத்தப்படும்.

(12ஆம் பக்கம் பார்க்க)










# நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப விவசாயம் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம்

**(11ஆம் பக்கத் தொடர்ச்சி)**

ஆரம்ப அமர்வின் பின்னர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாநாட்டில் கலந்து கொண்ட வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் எடுத்துக் கொண்ட குழு புகைப்படத்திலும் இணைந்து கொண்டார். மாநாட்டில் கலந்துகொண்ட அங்கத்துவ நாடுகளின் விவசாய அமைச்சர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

“இலங்கைப் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள சமயத்தில் தான் இந்த மாநாட்டை நடத்துகிறோம். 2022 இல் பயிர்ச் செய்கைக்குப் போதுமான உரம் இருக்கவில்லை. நாட்டில் உணவுப் பற்றாக்குறையும், அந்நியச் செலாவணி தட்டுப்பாடும் ஏற்பட்டிருந்தது.

அத்தகைய காலகட்டத்திற்குப் பிறகு, இன்று நாம் ஒரு குறிப்பிட்ட ஸ்திரத் தன்மையை அடைந்துள்ளோம். மிக விரைவில் வெளிநாட்டு கடன் வழங்குநர்கள் குழு மற்றும் பெரிஸ் கிளப்புடன் எங்களது இறுதி கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட எதிர்பார்க்கிறோம். பின்னர் நாம் வங்குறோத் தடைந்த நாடாக இருக்க மாட்டோம். ஆனால் அது போதுமானதல்ல.

துரிதமான பலன்களைப் பெறக் கூடிய பிரதான துறைகளாக விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறை காணப்படுகிறது. அதிர்ஷ்டவசமாக, USAID எங்களுக்கு உரம் பெற உதவியது. இது எங்கள் விவசாயத்தை வலுப்படுத்த உதவியது.

இரண்டாவதாக, அண்மைக் காலமாக நவீன விவசாய முறைகள் குறித்து நாங்கள் கவனம் செலுத்துகிறோம். அதற்கு 10 – 15 வருடங்கள் ஆகும். இருப்பினும் 10 வருடங்களில் அந்த இலக்கை அடைவதே எமது நோக்கமாகும். அதற்காக புதிய விவசாய முறைகளை நாம் நாட்டிற்குள் கொண்டு வருவோம்.

ஆனால் எமக்கு இன்னொரு பிரச்சினை உள்ளது. இளைஞர்கள் கிராமங்களை விட்டு நகரங்களுக்கு வருகிறார்கள். அவர்கள் பாரம்பரிய விவசாயத்தில் ஈடுபடுவதில்லை. விவசாயத்தை நவீன மயப்படுத்துவதன் மூலம் அவர்களை மீண்டும் கிராமங்களிலேயே தக்கவைத்துக் கொள்ள முடியும். அதற்கமையவே 03 பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்த விவசாய அமைச்சின் விடயப்பரப்புக்கள் ஓர் அமைச்சரின் கீழ் கொண்டு வரப்பட்டது.

மேலும், அது தொடர்பான நிறுவனங்களின் கட்டமைப்பையும் மறுசீரமைப்பு செய்ய ஆரம்பித்துள்ளோம். அதன் முதல் அங்கமாக விவசாயிகளுக்கு சிறந்த சேவையை வழங்க எதிர்பார்க்கிறோம். மேலும், நாடு முழுவதும் உள்ள விவசாய சேவை மையங்களை விவசாய நவீனமயமாக்கல் மையங்களாக மாற்றும் பணியை முன்னெடுத்து வருகிறோம். அதற்காக பொது மக்கள் மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறோம்.

மேலும், விவசாயப் பொருள்கள் கொள்வனவு, புதிய விநியோக வலையமைப்பு, குளிரூட்டல் களஞ்சியம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். அந்த வசதிகளை ஏற்படுத்துவோம். இது விவசாயத் துறையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். மேலும், இந்த நாட்டின் வரலாற்றில் மிகப்பெரிய தனியார்மயமாக்கலை நாம் ஆரம்பித்துள்ளோம். இதன்கீழ், மகாவலி திட்டத்தின் பின்னர் எஞ்சிய காணிகளையும் விவசாயிகளின் தேவைகளுக்கமையப் பகிர்ந்தளிக்க உள்ளோம். புதிய விவசாயத்தில் நுழைய விரும்பும் அனைவருக்கும் நாங்கள் நிலங்களை வழங்குவோம்.

1935 முதல் விவசாயிகளுக்கு நிலம் வழங்கியுள்ளோம். இந்த காணிகள் அனைத்தும் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழான அனுமதி பத்திரத்துடன் மட்டுமே வழங்கப்பட்டன. எனவே, இந்த நிலங்களில் விவசாயிகளுக்கு சட்டப்பூர்வ உரிமை இருக்கவில்லை. இப்போது அவர்களுக்கு அந்த நிலங்களுக்கான முழு உரிமத்தை வழங்குகிறோம். அதன்படி, இந்த வருடத்தில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு இலவச காணி உரிமை கிடைக்கும்.”– என்றார்.








# சுற்றாடல் இராஜாங்க அமைச்சராக ஜானக வக்கும்புர பதவிப்பிரமாணம்

சுற்றாடல் இராஜாங்க அமைச்சராக ஜானக வக்கும்புர பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் அவர் நேற்று பதவிப் பிரமாணம் செய்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜானக வக்கும்புர தற்போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு மேலதிகமாக அவருக்கு இந்தப் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டிருந்தார்.



# காமினி ஜயவிக்ரம பெரேராவின் உடலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அஞ்சலி

மூத்த அரசியல்வாதியும் முன்னாள் அமைச்சருமான மறைந்த காமினி ஜயவிக்ரம பெரேராவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறுதி அஞ்சலி செலுத்தினார்.

முன்னாள் அமைச்சரின் பூதவுடல் வைக்கப்பட்டுள்ள குருநாகல் கட்டுகம பலாவில் உள்ள வீட்டிற்கு நேற்று பிற்பகல் சென்ற ஜனாதிபதி இறுதி அஞ்சலி செலுத்தினார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்பின்னர், அவரது மகனான வடமேற்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அசங்க ஜயவிக்ரம உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு தனது அனுதாபங்களை ஜனாதிபதி தெரிவித்தார்.

இதன்போது, வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, அனுர பிரியதர்ஷன யாப்பா, முன்னாள் அமைச்சர் அகில விராஜ் காரியவசம், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் யாழ். பாதுகாப்புத் தரப்பினர் சந்திப்பு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும், பாதுகாப்புத் தரப்பினருக்கும் இடையிலான கலந்துரையாடல் யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எல்.டீ.பி.தெஹிதெனிய, இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் ஆணையாளர் நிமால் புஞ்சி ஹேவா, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ், பொலிஸ், இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மனித உரிமைச் சட்டங்கள் தொடர்பாகவும், பாதுகாப்புத் தரப்பினர் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாகவும், சிறு குற்றம், பாரிய குற்றங்கள் இடம்பெறும்போது விசாரணைகள் மேற்கொள்ளும் விதம் தொடர்பாகவும் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டது.





# இன்றைய ராசி பலன்கள் - 21.02.2024

## மேஷம்

நீங்கள் பொறுமையுடனும் உறுதியுடனும் இருக்க வேண்டும். உணர்ச்சிவசப்படுதல் தவிர்க்க வேண்டும். உங்கள் செயல்களை திட்டமிட்டு ஆற்றுவதன் மூலம் முன்னேற்றம் காணலாம்.

பணியில் உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் மோதல் காணப்படும். பணியிடத்தில் சுமுகமான சூழ்நிலை அமைய பதட்டத்தை கட்டுபடுத்த வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்க்க வேண்டும். ஈகோ உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று அதிகரிக்கும் செலவினங்கள் காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை பராமரிக்க சிக்கனமும் சேமிப்பும் அவசியம்.

நிலையான ஆரோக்கியத்திற்கு உணவில் கவனம் செலுத்த வேண்டும். ஆன்மீக ஈடுபாடு நல்ல ஆரோக்கியத்தை பராமரிக்க உதவும்.

## ரிஷபம்

இன்று நம்பிக்கையான போக்கு காணப்படும். இதனால் எளிதில் வெற்றியை அடையலாம். பயனுள்ள முடிவுகள் எடுப்பது உங்களுக்கு இன்று மிகவும் நல்லது.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. உங்கள் பணிகளை உற்சாகமாகவும் எளிதாகவும் செய்வீர்கள். உங்கள் பணிகளை விரும்பி செய்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். இது உறவின் பிணைப்பை வலுப்படுத்தும்.

பணப்புழக்கம் அதிக அளவு காணப்படும். பணம் சம்பந்தப்பட்ட முக்கியமான முடிவுகள் எடுக்க இன்றைய நாளை பயன்படுத்துங்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக நீங்கள் இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## மிதுனம்

தகவல் பரிமாற்றத்தின் போது கவனமாக இருக்க வேண்டும். சிறந்த திட்டமிடல் வேண்டும். உறுதியை வெளிபடுத்த வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில் தொழில் சார்ந்த அணுகுமுறை வேண்டும். உங்கள் முயற்சி அதிக அளவில் இருந்தாலும் அதிக அங்கீகாரம் கிடைக்காது.

இன்று உங்கள் துணையுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் துணையுடன் பேசும் போது நகைச்சுவை அணுகுமுறை கொள்ள வேண்டும்.

அதிக அளவு பணம் தக்க வைத்துக்கொள்ள இந்த நாள் சிறந்த நாளாக இருக்காது. இன்று பற்றாக்குறை காணப்படும் அல்லது உங்களின் சம்பாதிக்கும் ஆற்றல் குறைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது. தொண்டை வலியால் அவதிப்பட நேரும்.

## கடகம்

இன்று ஆன்மீக விஷயங்களில் ஆர்வம் வளர்த்துக் கொள்வதன் மூலம் மகிழ்ச்சியும் ஆறுதலும் கிடைக்கும். இழந்தது போன்ற உணர்வு காணப்படும்.

பணியில் குறைந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் பணிகளை மேம்படுத்த பயனுள்ள திட்டங்களை தீட்ட வேண்டும். சூழ்நிலையை அனுசரித்து நடந்து கொள்ளுங்கள்.

குடும்பப் பிரச்சினை குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிப்பீர்கள். கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது.

பண விஷயத்தில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். எனவே கவனமாக இருக்கவேண்டும். உங்கள் பணத்தை சாதுர்யமாகக் கையாள வேண்டும். உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.

## சிம்மம்

தொழில் சார்ந்த மற்றும் யதார்த்தமான அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உங்கள் செயல்களை ஆற்றுவதில் சில தடைகள் காணப்படும். இன்றைய நாளை கவனமுடன் திட்டமிட வேண்டும்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்ற மிகுந்த முயற்சி தேவை. உங்கள் செயல்களை சிறந்த முறையில் ஆற்ற திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் மாறுபடும் மன நிலையை வெளிப்படுத்துவீர்கள். நட்பான சகஜமான அணுகுமுறை தேவை. பணம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் கவலையை ஏற்படுத்தும். தேவையற்ற விஷயங்களுக்கு பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

கால்களில் விறைப்புத் தன்மை காணப்படும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## கன்னி

இன்று அதிர்ஷ்டமான நாள். உங்கள் இலக்கை அடைந்து மகிழ்ச்சி அடைவீர்கள். முக்கியமான முடிவுகள் இன்று எடுக்கலாம்.

இன்று உங்கள் பணிக்கான சிறந்த பலன்களைக் காண்பீர்கள். புதிய வாய்ப்புகள் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கும்.

உங்கள் உணர்வை நகைச்சுவையாக உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதன் மூலம் உங்கள் அன்பு வெளிப்படும்.

இன்று பணப்புழக்கம் சரளமாக காணப்படும்.இன்று சிறந்த முறையில் பணத்தை பராமரிப்பீர்கள். உங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் சிறந்த மாற்றம் காண்பீர்கள். இன்று உங்களுக்கு சாதகமான நாளாக அமையும்.

## துலாம்

இன்று உங்கள் விருப்பங்கள் மேம்படும் நாள். சுமுகமான பலன்கள் கிடைக்கும் முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். பயணங்களுக்கான வாய்ப்பு உள்ளது.

பணியைப் பொறுத்த வரை இன்று உற்சாகமான நாள். உங்களின் உழைப்புக்கான ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் போன்ற பண வரவு காணப்படும்.

உங்கள் துணையிடம் கலகலப்பாக பழக வேண்டும். உங்கள் துணையிடம் அனுசரணையான போக்கை பராமரிக்க வேண்டும்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். பண வரவும் அதிகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும். உங்கள் ஆற்றல் அதிகரித்து காணப்படும்.

## விருச்சிகம்

இறை வழிபாடு, ஸ்லோகம் மந்திரம் இவற்றின் மூலம் இன்று ஆறுதல் மற்றும் திருப்தி பெறலாம். இன்று உங்கள் செயல்கள் சிறப்பாக இருக்க அவற்றைத் திட்டமிடுங்கள்.

இன்று பணிகளை முறையாக திட்டமிட்டு ஆற்றுவதன் மூலம் நற்பலன்களைப் பெறலாம். உங்கள் மேலதிகாரிகளிடம் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடனான பேச்சு வார்த்தை ஆறுதல் அளிக்கும் வகையில் இருக்காது. உங்கள் இருவருக்கும் இடையே மோதல் ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

இன்று பணத்தை திட்டமிட்டு பராமரிக்க வேண்டும். செலவினங்கள் அதிகரித்து காணப்படும்.

இன்று காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

# இன்றைய ராசி பலன்கள் - 21.02.2024




உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள் அல்ல. முக்கியமான முடிவுகளை இன்று எடுக்க கூடாது அல்லது தள்ளிப்போட வேண்டும். நேர்மறையான எண்ணங்களைப் பராமரிப்பதன் மூலம் நீங்கள் விரும்பியபடி செயலாற்றலாம்.

கடினமாக உழைத்தாலும் அதற்கான பாராட்டு கிடைக்காது. இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும். பணிகள் கடினமாக காணப்படும்.

இன்று உங்கள் மன நிலையைப் பொருத்து உங்கள் செயல்கள் காணப்படும். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் நலம்.

பணம் சேர்ப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே உள்ளன. இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள்.

சளி அல்லது இருமலுக்கான வாய்ப்பு உள்ளது.




உங்கள் புத்திசாலித் தனத்தை பயன்படுத்தி நீங்கள் உங்கள் செயல்களில் வெற்றி பெறலாம். உங்கள் பொறுப்புகளை திறமையாக செய்வதே உங்களின் இன்றைய குறிக்கோளாக இருக்கும்.

பணியில் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துவீர்கள்.உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் திறமை பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் சிறந்த தகவல் பரிமாற்றம் கொண்டிருப்பீர்கள். இதனால் உங்கள் துணையின் உணர்வை புரிந்துகொள்வீர்கள். மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை சௌகரியமாக இருக்கும். உங்கள் நிதியைப் பொறுத்தவரை பயனுள்ள முடிவுகளை எடுப்பீர்கள். பணத்தைத் திறமையுடன் பயன்படுத்துவீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களின் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதனால் மகிழ்ச்சி உண்டாகும். முக்கியமான முடிவுகள் இன்று பலனளிக்கும். இன்று நீங்கள் பிரகாசிப்பீர்கள்.

உங்கள் பணியில் மிகுந்த திருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகள் மற்றும் கீழ் பணி புரிபவர்களின் ஆதரவு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். உங்களின் சிறந்த தகவல் பரிமாற்றம் காரணமாக இருவரிடையே அன்பு அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பயனுள்ள திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம் பண வளர்ச்சி ஏற்படும்.

மனம் ஸ்திரத்தன்மையுடன் காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறந்து விளங்கும்.




நீங்கள் உறுதியுடன் இருக்க வேண்டும். கவனமுடன் செயலாற்ற வேண்டும். தைரியமாகவும் துணிவாகவும் இருக்க முயல வேண்டும்.

பணிச்சுமை காரணமாக உங்கள் மேலதிகாரிகள் மற்றும் கீழ் பணிபுரிபவர்களுடன் சில விரும்பத் தாகாத தருணங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.


உங்கள் துணையுடன் சில அசௌகரியமான உணர்வுகளை எதிர்கொள்வீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணப்புழக்கம் போதுமானதாக இருக்காது. குடும்ப பொறுப்புகள் காரணமாக செலவுகள் காணப்படும்.

தேவையற்ற கவலைகளுக்கு ஆளாவீர்கள். இதனால் பதற்றமும் தலைவலியும் ஏற்படும்.





# முன் ஆயத்தப் பணிக்காகக் கச்சதீவுக்கு 40 பணியாளர்கள் இன்று செல்கின்றனர்

(ந.லோகதயாளன்)

கச்சதீவு ஆலய முன் ஆயத்தப் பணிக்காக நெடுந்தீவுப் பிரதேச செயலக மற்றும் பிரதேச சபையின் பணியாளர்கள் 40 பேர் இன்று அங்கு பயணிக்கின்றனர்.

கச்சதீவு புனித அந்தோணியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் 23ஆம் திகதி ஆரம்பித்து 24 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

இந்த திருவிழாவில் இலங்கை, இந்திய யாத்திரிகர்கள் 8 ஆயிரம் பேர் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படும் நிலையில் இவர்களுக்கான தங்குமிடம், சுகாதார வசதிகள் உள்ளிட்டவற்றை மேற்கொள்ளும் வகையில் அதற்கான பணித்தொகுதியே இன்று பயணிக்கின்றது.

இதேநேரம் எஞ்சிய பணிகளிற்கான பணியாளர்கள் நாளைய தினம் பயணிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமையோடு யாத்திரிகர்கள் நாளை மறுதினம் காலையில் பயணிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மக்கள் மூன்று வேளைச் சாப்பாட்டுக்குப் போராடும் போது

# மத்திய வங்கியின் உயர் அதிகாரிகளுக்கு லட்சக் கணக்கான ரூபா சம்பள உயர்வு!

### இது என்ன நியாயம் என்று சீறுகின்றார் விமல் வீரவன்ஸ

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் மூன்று வேளை உணவைக் கூடப் பெற்றுக் கொள்வதில் பெரும்பாலான மக்கள் போராடுகின்ற சூழ்நிலையில் மத்திய வங்கியின் உயர்மட்ட அதிகாரிகளின் சம்பளத்தை பல லட்சக்கணக்கில் அதிகரித்துள்ளமை எந்தளவுக்கு நியாயமானது.

சுயாதீனம் என்றுக் குறிப்பிட்டுக் கொண்டு மத்திய வங்கி தன்னிச்சையான முறையில் செயற்படும் சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வில் பிணைப் பொறுப்பாக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம், நம்பிக்கைப் பொறுப்பு பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டமூலம் உள்ளிட்ட ஏழு சட்டமூலங்கள் இரண்டாம் வாசிப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. இவ்விவாதத்தில்



உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மத்திய வங்கியின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்ட போது 'மத்திய வங்கியின் புதிய சட்டத்துக்கு அமைய சம்பளம் அதிகரிக்கப்பட்டதாகவும்,அது மத்திய வங்கியின் சுயாதீனம்' என்றும் அமைச்சர் பதிலளித்துள்ளார்.

மத்திய வங்கியின் உயர் அதிகாரிகளுக்கு விரும்பிய வகையில் தீர்மானம் எடுக்க இடமளிக்க கூடாது என்பதற்காகவே 'புதிய மத்திய வங்கி சட்டத்துக்கு' நாங்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்தோம்.

நாட்டு மக்களில் பெரும்பாலானோர் மூன்று வேளை உணவை உட்கொள்வதற்கு வகையின்றிப் போராடுகிறார்கள். வாழ்க்கை செலவுகள் அதிகரிப்பால் திண்டாடுகிறார்கள்.

இவ்வாறான பின்னணியில் மத்திய வங்கியின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு ரூபாயில் பல லட்சக்கணக்கில் சம்பளத்தை அதிகரிப்பது எந்தளவுக்கு நியாயமானது?

கரண்டி தம் கையில் இருப்பதால் மத்திய வங்கி எண்ணம் போல் உணவைப் பரிமாறிக் கொள்கிறது. ஜனாதிபதியின் பொருளாதார மீட்சி எந்தளவுக்கு முன்னேற்றமடைந்துள்ளது என்பதை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

சுயாதீனம் என்று குறிப்பிட்டுக் கொண்டு தன்னிச்சையாக செயற்படும் சூழலே மத்திய வங்கிக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. – என்றார்.